(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No. 246/2019**

CNR.No.TNNM08-002162-2019

Deposition of Prosecution/Defence/Court Witness for. DW.1

| | | |
|---|---|---|
| Name | : | சிவக்குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 13.12.2021.

முதல் விசாரணை:

நான் தற்சமயம் திருச்செங்கோடு கிழக்கு ரத வீதியில் பழக்கடை வைத்துள்ளேன். 2018ம் வருடம் ஐப்பசி மாதம் தேதி ஞாபகமில்லை, மாரியம்மன் கோவிலுக்கு செல்பவர்கள் பணம் கேட்டு தொந்தரவு செய்வார்கள் எனவே நான் சனி, ஞாயிறு தேதிகளில் கடையை மூடிவிட்டு ஊருக்கு சென்றுவிடுவேன். திங்கட்கிழமை கடைக்கு வந்தபோது ஏதோ நிலத்தை அளக்கும்போது பிரச்சினை என்று சொன்னார்கள். சம்பவ சமயத்தில் நான் இல்லாததால் என்ன பிரச்சினை என்று எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை.- இல்லை.

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No. 246/2019**

CNR.No. TNNM08-002162-2019

Deposition of Prosecution/Defence/Court Witness for.DW. 2

| | | |
|---|---|---|
| Name | : | ராமசாமி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 13.12.2021.

முதல் விசாரணை:

நான் தற்சமயம் திருச்செங்கோட்டில் டெக்ஸ்டைல் வைத்து தொழில் செய்துவருகிறேன். 27.10.2018ம் தேதி சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் கிழக்கு ரத வீதியில் ஒரு கட்டிடத்திற்கு முன்புகூட்டமாக இருந்தார்கள். நான் வேலூர் ரோட்டில் ஒருவரை பார்ப்பதற்காக அந்த வழியாக சென்றேன். நகர காவல்நிலையத்திலிருந்து எதிரிகள் மகேந்திரனும், கன்னியப்பனும் வெளியே வந்தார்கள். நான் மகேந்திரனிடம் உங்கள் கட்டிடத்திற்கு முன்பு ஆட்கள் கூட்டமாக இருக்கிறார்கள் என்று தகவல் சொன்னேன். என்னையும் சம்பவ இடத்திற்கு வரச்சொல்லி மகேந்திரன் அழைத்தார். நான் ஒரு சிறு வேலையை முடித்துவிட்டு வருவதாக சொல்லி 15.00 நிமிடம் கழித்து சம்பவ இடத்திற்கு சென்றேன். அப்போது கன்னியப்பன் கோர்ட் கமிஷனர் நோட்டிஸ் கொடுக்காமல் நிலத்தை அளப்பதற்காக வந்தார், எனவே நாங்கள் ஆட்சேபனை செய்கிறோம் என்று சொன்னார். அப்போது கன்னியப்பனுக்கும் எதிர் தரப்பினருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. சர்வேயர் பி.செல்வகுமார் என்பவர் நகர காங்கிரஸ் கட்சி தலைவர் இருதரப்பினரையும் சமாதானம் செய்து வைத்தார். செல்வராஜ் என்பவர் இரு தரப்பு ஆட்சேபனை உள்ளதால் நோட்டிஸ் கொடுத்து மற்றொரு தினம் இடத்தை அளக்க சொல்லி சமாதானம் செய்து இருதரப்பினரையும் அனுப்பிவைத்தார். டவுன் காவல் நிலைய போலிசார் சம்பவ இடத்தில் இருந்தார்கள். டவுன் காவல் நிலைய போலிசார் கன்னியப்பனிடமும், மகேந்திரனிடமும் புகார் கொடுக்க சொன்னார்கள். அவர்களுடன் நான் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். அவர்கள் சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். காவல் நிலையத்தில் அவர்களை விசாரிக்கும் போது நேரமாகிவிட்டதால் நான் ஈரோடுக்கு சென்றுவிட்டேன்.

குறுக்கு விசாரணை.- இல்லை.